Koviloor Digital Library

உ

ஸ்ரீ:

श्री शङ्करभगवत्पादविरचितम्

श्री लक्ष्मीनृसिंहकरावलम्बस्तोत्रम्

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் அருளிய

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ-கராவலம்ப ஸ்தோத்ரம்


உரையாசிரியர் :

Dr. ந. கங்காதரன்,

ரீடர், ஸம்ஸ்க்ருதத் துறை,

சென்னை பல்கலைக் கழகம்,

சென்னை.





பதிப்பகத்தார்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

சென்னை-600 017 — திருச்சி-620 002.

[விலை ரூ. 2

Koviloor Digital Library

© பதிப்புரிமை பதிப்பகத்தாரைச் சார்ந்தது

முதற்பதிப்பு 1988 1991

சென்னையில் ஸிப்ரோகா ஸ்டாகிஸ்டுகள் :

எம். தாமோதரம் அண்டு கம்பெனி
108, கார்ப்பொரேஷன் பழக்கடை
சென்னை-600 108

Printed By: Thilak Offset Press, Madras-600 021

Koviloor Digital Library

9/1

முன்னுரை

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ கருணாரஸ ஸ்தோத்ரம் என்றும் ஸங்கஷ்டநாசன லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்தோத்ரம் என்றும் அழைக்கப்படும் இந்த ஸ்தோத்ரம் வஸந்த திலகம் என்னும் விருத்தத்தில் அமைக்கப்பட்டது. தென்னகத்தில் வழக்கில் உள்ளபடி 17 செய்யுட்கள் காணப்படுகின்றன. ஆனால் வட நாட்டில் இச்செய்யுட்களில் 10, 12, 14, 16 நீங்கலாக 13 செய்யுட்களே காணப்படுகின்றன.

மாதவீய சங்கரவிஜயத்தில் மட்டும் இந்தத்துதி அரசன் அமருகன் உடலை விட்டு தன்னுடலை மீண்டும் அடைந்த பகவத்பாதர் இயற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. இந்தக் கருத்து பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

பிராட்டியுடன் கூடி அருள்பாலிக்கும் ஸ்ரீ திருமாலின் நரஸிம்ஹ வடிவினைக்குறித்து மிகவும் உருக்கமாக பாடப்பட்ட துதியாகும். இதனை ஆழ்ந்த பக்தியுடன் பாராயணம் செய்பவர்களுக்கு துன்பங்களனைத்தும் அகன்று இன்பங்களனைத்தும் வந்து சேரும்.

பக்தன் பிரஹ்லாதனின் சொல் காக்க திருமால் நரஸிம்ம வடிவில் தோன்றி இரண்யகசிபுவை கொன்றது நாம் அறிவோம். 'மாலோல நரஸிம்மர்' என்றழைக்கப்படும் தேவியுடன் கூடிய ஸ்ரீ திருமாலின்

Koviloor Digital Library

இவ்வடிவம் அவருடைய ஒன்பது நரஸிம்ம வடிவில் ஒன்றாகும். ஒன்பது வடிவங்களாவன :

ज्वालाहोबिलमालोलक्रोडकारञ्जभार्गवा: ।
योगानन्दश्छत्रवटपावना नव मूर्तय: ॥

ஜ்வாலாஹோபிலமாலோல க்ரோட காரஞ்ஜ பார்கவா: |
யோகாநந்தஶ்சத்ரவடபாவனா நவ மூர்த்தய: ||

இந்த ஸ்துதியை ஆங்கில மொழி பெயர்ப்புடன் ஆகஸ்ட் 1978-ல் "Voice of Sankara" பத்திரிகையில் வெளியிட்டேன். இப்பணியில் என்னை ஊக்குவித்து உதவிய டாக்டர் முடும்பி நரஸிம்ஹாசாரி அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இதை தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிட வெகு நாளாக விரும்பினேன். அந்த விருப்பம் கை கூட முழு மனதுடன் ஏற்றுக்கொண்ட ஸ்டீமா நிறுவனத்தின் உரிமையாளர் ஸ்ரீ வரதன் அவர்களுக்கும், அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீஸர் ஸ்ரீ வேங்கடேசய்யர் அவர்களுக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

இதைப் பாராயணம் செய்பவர்கள் அனைவருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹரின் பரிபூரண கடாக்ஷம் கிடைக்கட்டும்.

வைகுண்ட ஏகாதசி
பிரபவ - மார்கழி
31—12—1987

Dr. ந. கங்காதரன்.

Koviloor Digital Library

9/1

श्रीलक्ष्मीनृसिंहकरावलम्बस्तोत्रम्

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ கராவலம்ப ஸ்தோத்ரம்

श्रीमत्पयोनिधिनिकेतन चक्रपाणे
भोगीन्द्रभोगमणिरञ्जितपुण्यमूर्ते ।
योगीश शाश्वत शरण्य भवाब्धिपोत
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ १ ॥

ஸ்ரீமத்பயோநிதி நிகேதந சக்ரபாணே
போகீந்த்ரபோக-மணிரஞ்ஜித-புண்யமூர்த்தே
யோகீஶ ஶாஶ்வத ஶரண்ய பவாப்திபோத
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 1

(பதவுரை): श्रीमत्पयोनिधिनिकेतन - திருப்பாற்கடலை உறைவிடமாகக் கொண்டவனே! चक्रपाणे - சக்ராயுதத்தைக் கையில் தாங்கியவனே! भोगीन्द्र-भोग-मणि-रंजित-पुण्यमूर्ते - ஆதி சேஷனின் தலையில் உள்ள ரத்னங்களினால் ஒளிரும் புண்யமான வடிவை உடையவனே! योगीश - யோகிகளுக்கெல்லாம் தலைவனே! शाश्वत - நிலையானவனே! शरण्य - தஞ்சமடையத் தக்கவனே! भवाब्धिपोत - ஸம்ஸாரமெனும் கடலைக் கடக்க ஓடம் போன்றவனே! लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே! मम - எனக்கு, करावलम्बं - கைப்பிடியை, देहि - கொடுத்தருளவேண்டும்.

(பொழிப்புரை): திருப்பாற்கடலை உறைவிடமாகக் கொண்டவனே! சக்ராயுதத்தை கையில் தாங்கியவனே! ஆதிசேஷனின் தலையில் உள்ள ரத்னங்களி

Koviloor Digital Library

னால் ஒளிரும் புண்யமான வடிவை உடையவனே! யோகிகளுக்கெல்லாம் தலைவனே! நிலையானவனே! தஞ்சமடையத் தக்கவனே! ஸம்ஸாரமெனும் கடலைக் கடக்க ஓடம் போன்றவனே! லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே! எனக்குக் கை கொடுத்து அருள வேண்டும்.

குறிப்பு:—ஆபத்தில் சிக்கியவனை கை தூக்கிவிடுவது என்பது உலக நியதி. ஸம்ஸாரம் என்னும் இந்த மீளா இறப்பு - பிறப்புச் சுழலிலிருந்து கைதூக்கிவிட அதற்கான அனைத்து குணங்களுமுடைய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹரை வேண்டுகிறார். கடைசி ஒரு செய்யுளைத் தவிர மற்ற எல்லா செய்யுட்களும் கடைசி வரியில் இந்த வேண்டுகோளையே கொண்டு அமைந்துள்ளன.

Oh! (Lord) Lakṣmīnṛsiṁha! One who has the holy milky ocean as the abode! The holder of the disc in the arm! The possessor of a meritorius form adorned by the gems on the head of (Śeṣa) the lord of the serpents! The master of Yogins! The eternal! The refuge! The boat for crossing the ocean of birth and death! Extend to me (thy) supporting hand.

ब्रह्मेन्द्ररुद्रमरुदर्ककिरीटकोटि-
सङ्घट्टिताङ्घ्रिकमलामलकान्तिकान्त ।
लक्ष्मीलसत्कुचसरोरुहराजहंस
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ २ ॥

ப்ரஹ்மேந்த்ர-ருத்ர-மருதர்க்க-கிரீடகோடி-
ஸங்கட்டிதாங்க்ரி-கமலாமல-காந்திகாந்த
லக்ஷ்மீ-லஸத்குச-ஸரோருஹ-ராஜஹம்ஸ
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 2

Koviloor Digital Library 9/1

(பதவுரை) : ब्रह्मेन्द्र-रुद्र-मरुदर्क-किरीट-कोटि-सङ्घट्टिताङ्घ्रि-कमलामल-कान्ति-कान्त - நான்முகன், இந்த்ரன், ருத்ரன், மருத்துக்கள், ஸூர்யன் முதலானவரின் கிரீடங்களின் முனைகளால் உறையப்பெற்று மாசற்று ஒளிரும் தாமரை போன்ற சரணங்களை உடையவனே ! लक्ष्मी-लसत्-कुच-सरोरुह-राजहंस - லக்ஷ்மீ தேவியின் அழகிய ஸ்தனங்களாகிற தாமரை மலருக்கு ராஜஹம்ஸம் போன்றவனே ! लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹ பெருமானே ! मम - எனக்கு, करावलम्बं - கைப்பிடியை, देहि - கொடுத்தருள வேண்டும்.

(பொழிப்புரை) : நான்முகன், இந்த்ரன், ருத்ரன், மருத்துக்கள், ஸூர்யன் முதலானவரின் கிரீடங்களின் முனைகளால் உறையப்பெற்று மாசற்று ஒளிரும் தாமரை போன்ற சரணங்களை உடையவனே ! லக்ஷ்மீ தேவியின் ஸ்தனங்களாகிற தாமரை மலருக்கு ராஜ ஹம்ஸம் போன்றவனே ! லக்ஷ்மீந்ருஸிம்ஹனே ! எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—अमलकान्तिकान्त (அமலகாந்தி-காந்த) என்னும் சொற்றொடரை தனியாகவும் கொண்டு மாசற்ற காந்தியுடன் ஒளிர்பவனே என்றும் பொருள் கூறலாம். நான்முகன் முதலான அனைவரும் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹரை வணங்குவதால் ஏனையோரின் கிரீடங்கள் அவருடைய பாதங்களை உராய்கின்றன. இயற்கையிலேயே அழகான அவருடைய பாதங்கள் ஒளிர்கின்றன.

கச்யப முனிவருக்கு திதி, அதிதி என்று இரு மனைவியர். அதிதியின் மகனான இந்த்ரனின் செழிப்பைக் கண்டு மனம் பொறாத திதி அவனை அழிக்க வேண்டி கச்யபரின் சொற்படி

Koviloor Digital Library

கடும் நோன்பு நூற்றருளி. அச்சமயம் இந்திரன் அவளுக்குப் பணிவிடை செய்து வந்தான். ஒரு சமயம் அவள் தன் ஒழுங்கு முறை தவறும் பொழுது இந்த்ரன் அவளது கருவை ஏழாகப் பகுத்தான். மீண்டும் அவைகள் ஒவ்வொன்றையும் ஏழாகப் பகுத்தான். திதியின் வேண்டுகோளுக்கிணங்க அந்த 49 பேருக்கும் தேவ பதவியைக் கொடுத்தான். அவைகள் மருத்துக்கள் என்று அழைக்கப்பட்டன.

Oh! (Lord) Lakṣmīnṛsiṁha! One who shines with pure lustre of the lotus feet rubbed by the tips of the crowns of Brahmā, Indra, Rudra, Maruts, Sun (and others)! The royal swan that inhabits the lotus breasts of (Goddess) Laksmi! Extend to me (thy) supporting hand.

संसारदावदहनातुरभीकरोरु-
ज्वालावलीभिरतिदग्धतनूरुहस्य ।
त्वत्पादपद्मसरसीशरणागतस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ३ ॥

ஸம்ஸாரதாவ-தஹனாதுர-பீகரோரு-
ஜ்வாலாவலீபிரதிதக்த-தநூருஹஸ்ய
த்வத்பாதபத்ம-ஸரஸீ-ஶரணாகதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 3

(ப-ரை): संसार-दाव-दहनातुर-भीकरोरु-ज्वालावलीभिरति-दग्ध-तनूरुहस्य - ஸம்ஸாரமென்னும் காட்டுத்தீயின் சூட்டால் தஹிக்கப்பட்டு அல்லல் படுபவனையும், அச்சுறுத்தும் பரவலான தீயின் ஸமூஹங்களால் மிகவும் கருகிப்

Koviloor Digital Library

போன ரோமங்களை உடையவனையும், त्वत्पादपद्म-सरसी-शरणागतस्य - உம்முடைய பாதந்தாமரை என்னும் நீர்த் தேக்கத்தை அண்டினவனையும் உள்ள, मम - எனக்கு, लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே! करावलम्बम् - கைப்பிடியை, देहि - கொடுத்தருள வேண்டும்.

(பொ-ரை) : லக்ஷ்மீந்ருஸிம்ஹனே! ஸம்ஸார மென்னும் காட்டுத்தீயினால் எரிக்கப்பட்டு அல்லல் படுபவனும், அச்சுறுத்தும் பரந்த தீயின் ஸமூஹங்களால் கருகிய ரோமங்களை உடையவனுமான எனக்குக் கைகொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—காட்டுத் தீக்கு ஒப்பான இந்த ஸம்ஸாரத்தினின்றும் காத்தருளக் கூடியது நீர்த் தேக்கத்துக் கொப்பான பெருமானின் பாதத் தாமரைகளே.

Oh ! (Lord) Lakṣmīnṛsimha ! Extend (thy) supporting hand to me who have resorted to the tank in the form of your lotus feet, (myself) being afflicted by the heat of the forest fire of worldly existence with hairs burnt down by the frightening extensive columns of fire.

संसारजालपतितस्य जगन्निवास
सर्वेन्द्रियार्तबडिशार्थझषोपमस्य ।
प्रोत्खण्डितप्रचुरतालुकमस्तकस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ४ ॥

Koviloor Digital Library

ஸம்ஸார-ஜால பதிதஸ்ய ஜகந்நிவாஸ
ஸர்வேந்த்ரியார்த்த-படிஶார்த்த ஜஷோபமஸ்ய
ப்ரோத்கண்டித-ப்ரசுர-தாலுக-மஸ்தகஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 4

(ப-ரை) : संसारजालपतितस्य - ஸம்ஸாரமென்னும் வலையில் விழுந்தவனான, जगन्निवास - எங்கும் வியாபித்திருப்பவனே! सर्वेन्द्रियार्थ-बडिशार्थ-झषोपमस्य - தூண்டிலால் இழுக்கப்பட்ட மீன் போன்று பொருளாசையால் கவரப் பட்ட புலன்களை உடையவனான, प्रोत्खण्डित-प्रचुर-तालुक-मस्तकस्य - துண்டிக்கப்பட்ட தாடைகளையும் தலையையும் உடையவனான, लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே! मम - எனக்கு, करावलम्बम् - கைப்பிடியை, देहि - கொடுத்தருள வேண்டும்.

(பொ-ரை) : லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே! எங்கும் வியாபித்திருப்பவனே! ஸம்ஸாரமென்னும் வலையில் விழுந்தவனும், தூண்டிலால் இழுக்கப்பட்ட மீன்போல பொருளாசையால் ஈர்க்கப் பட்ட புலன்களை உடையவனும், துண்டிக்கப்பட்ட தாடைகளையும் தலையையும் உடையவனுமான எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—தூண்டிலிலுள்ள புழுவினைப் பெற விரும்பி மீன் தூண்டிலிலகப்படுவது போல இப்புவியில் புலன்களும் பொருட்கள் பால் ஈர்க்கப்படுகின்றன. அதுவே நாம் வாழ்க்கைச் சுழலிலகப்பட்டு அல்லல்பட காரணமாகும்.

Oh! Lord! Lakṣmīnṛsiṁha! Omnipresent! Extend thy supporting hand to me who has fallen into

Koviloor Digital Library

the nets of worldly existence being drawn by the objects of all the sense - organs like a fish drawn by the hook, with head and cheeks rent asunder.

संसारकूपमतिघोरमगाधमूलं
संप्राप्य दुःखशतसर्पसमाकुलस्य ।
दीनस्य देव कृपया पदमागतस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ।। ५ ।।

ஸம்ஸாரகூபமதிகோரமகாதமூலம்
ஸம்ப்ராப்ய துக்கஶதஸர்ப்பஸமாகுலஸ்ய
தீநஸ்ய தேவ க்ருபயா பதமாகதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 5

(ப-ரை): संसारकूप-ஸம்ஸாரமென்னும் கிணற்றை, अतिघोरं - மிகவும் பயங்கரமான, अगाधमूलं - ஆழமான அடித்தலத்தை உடைய, संप्राप्य - அடைந்து, दुःखशत-सर्पसमाकुलस्य - நூற்றுக்கணக்கான இன்னல்களான அரவங்களால் துன்புறும், दीनस्य - கதியற்றவனுன, देव - தேவனே, कृपणापदं - இரங்கத் தக்க நிலையை, आगतस्य - அடைந்த, लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே, मम - எனக்கு, करावलम्बम् - கைப்பிடியை, देहि - கொடுத்தருள வேண்டும்.

(பொ-ரை): லக்ஷ்மீந்ருஸிம்ஹனே! தேவனே! ஆழமான அடித்தலத்தை உடையதும் மிகவும் பயங்கரமானதும் ஸம்ஸாரமென்னும் கிணற்றை அடைந்து நூற்றுக்கணக்கான இன்னல்களான அரவங்களால்

Koviloor Digital Library

துன்புறும் கதியற்றவனான இரங்கத்தக்க நிலையை அடைந்த எனக்கும் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—அளவிட முடியாத ஆழத்தைக்கொண்ட கிணற்றுடன் ஸம்ஸாரத்தை ஒப்பிடுவது வழக்கம். அதிலிருந்து வெளிவர வழி அறியாமல் பல்வேறு இன்னல்களுக்கு ஆளான கதியற்றவனை கைதூக்கி காக்க வேண்டுகின்றார்.

Oh ! Lord Lakṣmīnṛsiṁha ! Kindly extend (thy) supporting hand to me who has been tormented by serpents in the form of hundreds of miseries after having reached the bottom of the unfathomable well of frightening worldly existence and who in distress have resorted to your feet.

संरारभीकरकरीन्द्रकराभिघात-
निष्पिष्टमर्मवपुषः सकलार्तिनाश ।
प्राणप्रयाणभवभीतिसमाकुलस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ६ ॥

ஸம்ஸாரபீகர-கரீந்த்ர-கராபிகாத-
நிஷ்பிஷ்டமர்மவபுஷ: ஸகலார்த்திநாஶ
ப்ராண-ப்ரயாண-பவபீதி-ஸமாகுலஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 6

(ப-ரை) : संसार - भीकर - करीन्द्र - कराभिघात-निष्पिष्ट-मर्मवपुषः - ஸம்ஸாரமாகிற பயங்கரமான யானையின் துதிக்கையினால் அடிபட்டு நசுக்கப்பட்ட (முக்கிய) நுண்ணிய உறுப்புகளைக் கொண்ட, सकलार्तिनाश - இன்னல்களனைத்தையும் அழிப்பவனே! प्राण-प्रयाण-भव-

Koviloor Digital Library

भीति-समाकुलस्य - பிறப்பு இறப்பு என்னும் வாழ்க்கை அச்சத்தினால் அல்லலுறும், लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹ பெருமாளே! मम - எனக்கு, करा-वलम्बम् கைப்பிடியை, देहि - கொடுத்தருளவேண்டும்.

(பொ-ரை) : லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே! இன்னல்களனைத்தையும் போக்குபவனே! ஸம்ஸாரமென்னும் பயங்கரமான யானையின் துதிக்கையினால் அடிபட்டு நசுக்கப்பட்ட (முக்கிய) நுண்ணிய உறுப்புகளைக் கொண்டவனும், பிறப்பு இறப்பு என்னும் வாழ்க்கையாகிற அச்சத்தினால் அல்லலுறுபவனுமான எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:-- சிங்கத்தைத் தவிர யானையைத் துரத்த துணிவும் வலிமையும் கொண்டவர் எவருமிலர். அதனால் யானையைப் போன்று மிதித்து நசுக்கும் வாழ்க்கையினின்றும் காத்தருள வல்லவர் நரஸிம்ஹமூர்த்தியே.

Oh! (Lord) Lakṣmīnṛsiṁha! Extend (thy) supporting hand to me whose vital parts of the body have been ground by the pounding of the trunk of the frightening elephant of worldly existence and who have been tormented by the fear of mundane life and death.

संसारसर्पघनवक्त्रभयोग्रतीव्र-
दंष्ट्राकरालविषदग्धविनष्टमूर्तेः ।
नागारिवाहन सुधाब्धिनिवास शौरे
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ७ ॥

Koviloor Digital Library

ஸம்ஸாரஸர்ப்பகந-வக்த்ர-பயோக்ர-தீவ்ர-
தம்ஷ்ட்ரா-கரால-விஷதக்தவிநஷ்ட-மூர்த்தே:
நாகாரிவாஹந ஸுதாப்திநிவாஸ ஸௌரே
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 7

(ப-ரை) : संसार-सर्प-घन-वक्त्र-भयोग्रतीव्र-दंष्ट्राकराल-विषदग्ध-विनष्टमूर्तेः - வாழ்க்கை என்னும் பாம்பின் விரிந்த வாயிலுள்ள அச்சுறுத்தும் கடுமையான வலிமையான பற்களிலுள்ள கொடிய நஞ்சினால் பொசுக்கப்பட்டு உரு விழந்த, नागारिवाहन - பாம்பின் பகைவனை (கருடனை) வாஹனமாகக் கொண்டவனே! सुधाब्धिनिवास - அமுதக் கடலில் வசிப்பவனே! शौरे - வசுதேவன் புதல்வனுய் அவதரித்தவனே! लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே! मम - எனக்கு, करावलम्बम् - கைப்பிடியை, देहि - கொடுத்தருளவேண்டும்.

(பொ-ரை) : லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே! கருடனை வாஹனமாகக் கொண்டவனே! அமுதக் கடலில் வசிப்பவனே! வசுதேவன் புதல்வனுய் அவதரித்தவனே! வாழ்க்கை என்னும் பாம்பின் விரிந்த வாயிலுள்ள அச்சுறுத்தும் கடுமையான வலிமையான பற்களிலுள்ள கொடிய நஞ்சினால் பொசுக்கப் பட்டு உருவிழந்த எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—வாழ்க்கையை பாம்பிற்கு ஒப்பாகக் கூறுவது வழக்கம்.

Oh! (Lord) Lakṣmīnṛsiṁha! Śauri (Viṣṇu)! Resident of the nectarine ocean! One who has (Garuḍa)

Koviloor Digital Library

the enemy of serpents as (your) vehicle ! Extend (thy) supporting hand to me who am ruined and burnt by the severe and dreadful poison from the fangs of frightening wide mouth of the serpent of wordly existence.

संसारवृक्षमघबीजमनन्तकर्म-
शाखाशतं करणपत्रमनङ्गपुष्पम् ।
आरुह्य दुःखफलिनं पततो दयालो
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ८ ॥

ஸம்ஸாரவ்ருக்ஷமகபீஜமநந்தகர்ம-
ஶாகாஶதம் கரணபத்ரமநங்கபுஷ்பம்
ஆருஹ்ய துக்கபலிநம் பததோ தயாலோ
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 8

(ப-ரை): संसारः- वृक्षमघबीजम् - अनन्तकर्म - शाखाशतं - பாவங்களை விதையாகவும் அளவற்ற செய்கைகளை எண்ணற்ற கிளைகளாகவும் உடைய வாழ்க்கை என்னும் மரத்தை, करणपत्रम् - புலன்களை இலைகளாக உடைய, अनङ्गपुष्पम् - காமனை மலராக உடைய, आरुह्य - ஏறி, दुःखफलिनं - துயரங்களைப் பழங்களாக உடைய, पततः - விழுகின்ற, दयालो - இரக்கமுடையவனே, लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே! मम - எனக்கு, करावलम्बम् - கைப்பிடியை, देहि - கொடுத்தருள வேண்டும்.

(பொ-ரை): லக்ஷ்மியுடன் கூடிய நரஸிம்ஹப் பெருமானே! இரக்கமுடையவனே! பாவங்களை

Koviloor Digital Library

விதையாகவும், அளவற்ற செய்கைகளை எண்ணற்ற கிளைகளாகவும், புலன்களை இலைகளாகவும், காமனை மலராகவும், துயரங்களைப் பழங்களாகவும் உடைய வாழ்க்கை என்னும் மரத்தின்மீது ஏறி விழுகின்ற எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—வாழ்க்கை என்பது மிகப் பொருத்தமாக மரத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

Oh! (Lord) Lakṣmīnṛsiṁha! The compassionate! Extend (thy) supporting hand to me who am falling from the tree of worldly life whose seeds are the sins, countless branches are the manifold acts, leaves are the sense-organs, flower is the god of love and fruits are the miseries.

संसारसागरविशालकरालकाल-
नक्रग्रहग्रसननिग्रहविग्रहस्य ।
व्यग्रस्य रागनिचयोर्मिनिपीडितस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ९ ॥

ஸம்ஸார-ஸாகர-விஶால-கராலகால-
நக்ரக்ரஹ-க்ரஸந-நிக்ரஹவிக்ரஹஸ்ய
வ்யக்ரஸ்ய ராகநிசயோர்மி-நிபீடிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 9

(ப-ரை) : संसार-सागर-विशाल-कराल-काल-नक्र-ग्रह-ग्रसन-निग्रह-विग्रहस्य - வாழ்க்கைக் கடலில் பரந்த அச்சுறுத்தும் காலமென்னும் முதலைகளால் பிடிக்கப்பட்டு விழுங்கப் படுகின்ற உடலை உடைய, व्यग्रस्य-பலவிதமான கவலை

Koviloor Digital Library

உடைய, रागनिचयोर्मिनिपीडितस्य - பலவிதமான ஆசைகள் என்னும் அலைகளால் அல்லல் படும், लक्ष्मीनृसिंह- லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! मम - எனக்கு, करावलम्बम् - கைப்பிடியை, देहि - கொடுத்தருள வேண்டும்.

(பொ-ரை): லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! வாழ்க்கைக் கடலில் பரந்த அச்சுறுத்தும் காலமென்னும் முதலைகளால் பிடிக்கப்பட்டு விழுங்கப்படுகின்ற உடலை உடையவனும், பலவிதமான கவலை உடையவனும், பலவிதமான ஆசைகள் என்னும் அலைகளால் அல்லல் படுபவனுமான எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—இங்கு வாழ்க்கையை கடலுக்கு ஒப்பாகக் கூறி முதலைகளைப் போன்ற கொடிய காலத்தினின்றும் காக்கக் கோரப்படுகிறது.

Oh! (Lord) Lakṣmīnṛsiṁha! Extend (thy) supporting hand to me whose body is being seized and eaten up by the crocodiles in the form of the extensive frightening time in the ocean of worldly existence, one who is having manifold worries, and one who is afflicted by tides of attachment.

संसारसागरनिमज्जनमुह्यमानं
दीनं विलोकय विभो करुणानिधे माम् ।
प्रह्लादखेदपरिहारकृतावतार
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ १० ॥

Koviloor Digital Library

ஸம்ஸார-ஸாகர-நிமஜ்ஜநமுஹ்யமானம்
தீநம் விலோகய விபோ கருணாநிதே மாம்
ப்ரஹ்லாதகேத-பரிஹார-க்ருதாவதார
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 10

(ப-ரை) : संसार-सागर-निमज्जन-मुह्यमानं - வாழ்க்கைக் கடலில் முழுகி மயங்குகின்ற, दीनं - எளியோனை, विलोकय - (கடைக்கண்ணால்) பார்க்க வேண்டும். विभो- மிகவும் வல்லமை உடையவனே ! करुणानिधे - கருணை நிதியே ! माम् - என்னை, प्रह्लाद-खेद-परिहार-कृतावतार - பிரஹ்லாதனின் இன்னலைப் போக்க அவதாரம் செய்தவனே ! लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே ! मम - எனக்கு, करावलम्बम् - கைப்பிடியை, देहि - கொடுத்தருள வேண்டும்.

(பொ-ரை) : மிகவும் வல்லமை உடையவனே ! கருணை நிதியே ! பிரஹ்லாதனின் இன்னலைப் போக்க அவதாரம் செய்தவனே ! வாழ்க்கைக் கடலில் முழுகி மயங்குகின்ற எளியோனை என்னை (கடைக்கண்ணால்) பார்க்க வேண்டும். லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே ! எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—அச்சுறுத்தும் கொடிய இரணியகசிபுவிடமிருந்து பக்தன் பிரஹ்லாதனைக் காக்க வேண்டி நரஸிம்ஹ வடிவெடுத்தவரைக் காட்டிலும் நம்மை நமது வாழ்க்கைக் கடலிலிருந்து மீட்க வலிவுடையவர் வேறெவர்.

Oh ! (Lord) Lakṣmīnṛsiṁha ! Extend (thy) supporting hand to me. Oh ! Mighty Lord ! The treasure of compassion ! One who has manifested and dispelled

Koviloor Digital Library

the grief of Prahlāda! Look at me, who am being stupefied on account of being drowned in the ocean of worldly existence.

संसारघोरगहने चरतो मुरारे
मारोग्रभीकरमृगप्रवरार्दितस्य ।
आर्तस्य मत्सरनिदाघनिपीडितस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ।। ११ ।।

ஸம்ஸார-கோரகஹநே சரதோ முராரே
மாரோக்ர-பீகர-ம்ருகப்ரவரார்திதஸ்ய
ஆர்த்தஸ்ய மத்ஸரநிதாக-நிபீடிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 11

(ப-ரை): संसार-घोर-गहने - வாழ்க்கை என்னும் அச்சுறுத்தும் காட்டில், चरतो-திரிகின்ற, मुरारे- முரனின் பகைவனே! मारोग्र-भीकर-मृगप्रवरार्दितस्य - விலங்குகளில் தலை சிறந்த (சிங்கம்) போன்ற உக்கிரமான அச்சுறுத்தும் காமனால் பீடிக்கப்பட்டவனுடைய, आर्तस्य - மிகவும் துன்பமுற்றவனுடைய, मत्सर-निदाघ-निपीडितस्य - பொறாமை என்னும் கோடையினால் பீடிக்கப்பட்டவனுடைய, लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! मम - எனக்கு, करावलम्बम् - கைப்பிடியை, देहि - கொடுத்தருள வேண்டும்.

(பொ-ரை): லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! முரனின் பகைவனே! வாழ்க்கை என்னும் அச்சுறுத்தும் காட்டில் திரிகின்றவனும், விலங்குகளில்

Koviloor Digital Library

தலைசிறந்த (சிங்கம்) போன்ற உக்கிரமான அச்சுறுத்தும் காமனால் பிடிக்கப்பட்டவனும், மிகவும் துன்பமுற்றவனும், பொறாமை என்னும் கோடையினால் பிடிக்கப்பட்டவனுமான எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு: —முரனென்னும் அரக்கனைக் கொன்றதால் திருமால் அல்லது கண்ணனுக்கு முராரி என்று பெயர்.

Oh! (Lord) Lakṣmīnṛsiṁha! Enemy of Mura! Extend (thy) supporting hand to me who am roaming in the frightening forest of worldly existence, and who am tormented by the frightening king of animals (lion) in the form of the god of love and afflicted by jealousy in the form of summer.

बद्ध्वा गले यमभटा बहु तर्जयन्त:
कर्षन्ति यत्र भवपाशशतैर्युतं माम् ।
एकाकिनं परवशं चकितं दयालो
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ १२ ॥

பத்த்வா கலே யமபடா பஹு தர்ஜயந்த:
கர்ஷந்தி யத்ர பவபாஶ-ஶதைர்யுதம் மாம்
ஏகாகிநம பரவஶம் சகிதம் தயாலோ
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 12

(ப-ரை): बद्ध्वा - (பாசத்தால்) கட்டி, गले - கழுத்தில், यमभटा: - யமனின் ஆட்கள், बहु - மிகவும், तर्जयन्त: அதட்டுபவர்களாக, कर्षन्ति - இழுத்துச் செல்கிறார்கள்.

Koviloor Digital Library

यत्र - எங்கேயோ, भवपाशशतै-र्युतं - வாழ்க்கை என்னும் நூற்றுக் கணக்கான பாசத்தினுல் சூழப்பட்ட, मां - என்னை, एकाकिनं - தனித்திருப்பவனை, परवशं - பிறர் வயப்பட்டவனை, चकितं - அச்சுற்றவனை, दयालो - இரக்க முடையவனே! लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! मम - எனக்கு, करावलम्बम् - கைப்பிடியை, देहि - கொடுத்தருளவேண்டும்.

(பொ-ரை) : லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! இரக்கமுடையவனே! வாழ்க்கையின் நூற்றுக்கணக்கான பாசங்களால் சூழப்பட்ட என்னை யமனின் ஆட்கள் கழுத்தில் (பாசக்கயிற்ருல்) கட்டி மிகவும் அதட்டுபவர்களாக எங்கேயோ இழுத்துச் செல்கிருர்கள். தனித்திருப்பவனும், பிறர் வயப்பட்டவனுமான எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

Oh ! (Lord) Lakṣmīnṛsimha ! Compassionate one ! The servants of Yama having bound me in the neck, threatening (me) repeatedly drag me somewhere who am surrounded by hundreds of noose in the form of worldly existence. Extend (thy) supporting hand to me

लक्ष्मीपते कमलनाभ सुरेश विष्णो
वैकुण्ठ कृष्ण मधुसूदन पुष्कराक्ष ।
ब्रह्मण्य केशव जनार्दन वासुदेव
देवेश देहि कृपणस्य करावलम्बम् ॥ १३ ॥

Koviloor Digital Library

லக்ஷ்மீபதே கமலநாப ஸுரேஶ விஷ்ணோ
வைகுண்ட க்ருஷ்ண மதுஸூதன புஷ்கராக்ஷ
ப்ரஹ்மண்ய கேஶவ ஜனார்த்தந வாஸுதேவ
தேவேஶ தேஹி க்ருபணஸ்ய கராவலம்பம் 13

(ப-ரை) : लक्ष्मीपते - லக்ஷ்மியின் நாதனே! कमलनाभ- தாமரையை தொப்புளில் உடையவனே! सुरेश - தேவர்களின் தலைவனே! विष्णो - வியாபித்திருப்பவனே! वैकुण्ठ - வைகுண்டனே! कृष्ण-கிருஷ்ணனே! मधुसूदन - மது என்ற அசுரனைக் கொன்றவனே! पुष्कराक्ष - தாமரைக் கண்ணனே! ब्रह्मण्य - பிரம்மனே! केशव - கேசவனே (அழகிய அடர்ந்த கேசத்தை உடையவனே)! जनार्दन - ஜனார்த்தனனே (மக்களின் இன்னல்களைக் களைபவனே)! वासुदेव - வஸுதேவனின் மைந்தனே! देवेश - தேவர்களின் தலைவனே! देहि - கொடுத்தருள வேண்டும். कृपणस्य - இந்த எளியோனுக்கு, करावलम्बम्-கைப்பிடியை.

(பொ-ரை) : லக்ஷ்மியின் நாதனே! தாமரையை தொப்புளில் உடையவனே! தேவர்களின் தலைவனே! வியாபித்திருப்பவனே! வைகுண்டனே! கிருஷ்ணனே! மது என்ற அசுரனைக் கொன்றவனே! தாமரைக் கண்ணனே! பிரம்மனே! கேசவனே! ஜனார்த்தனனே! வஸுதேவனின் மைந்தனே! தேவர்களின் தலைவனே! இந்த எளியோனுக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—'வைகுண்ட' என்னும் சொல்லை பராசரபட்டர் பின்வருமாறு விளக்கியுள்ளார்: "நீருடன் புவியையும், காற்றுடன் ஆகாயத்தையும், ஒளியுடன் காற்றையும் இணைப்பவர் 'வைகுண்ட' எனப்படுவர்."

Koviloor Digital Library

Oh ! consort of Lakṣmī ! One who has the lotus in the navel ! Lord of the celestials ! Viṣṇu ! Vaikuṇṭha ! Kṛṣṇa ! Slayer of (the demon) Madhu ! Lotus-eyed ! Brahman ! Keśava ! Janārdana ! Vāsudeva ! Lord of the gods ! Extend (thy) supporting hand to this poor creature.

एकेन चक्रमपरेण करेण शङ्खम्-
अन्येन सिन्धुतनयामवलम्ब्य तिष्ठन् ।
वामेतरेण वरदाभयपद्मचिह्नं
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ १४ ॥

ஏகேந சக்ரமபரேண கரேண ஶங்கம்
அன்யேன ஸிந்து-தனயாமவலம்ப்ய திஷ்டன்
வாமேதரேண வரதாபயபத்ம-சிஹ்னம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 14

(ப-ரை) एकेन चक्रम् - ஒரு (கையினால்) சக்ராயுதத்தையும், अपरेण करेण शङ्खम् - மற்றொரு கையினால் சங்கையும், अन्येन - மற்றொரு கையால், सिन्धुतनयाम्- லக்ஷ்மியை, अवलम्ब्य तिष्ठन् - அணைத்துக் கொண்டும், वामेतरेण- வலது கையால், वरदाभयपद्मचिह्नं - வரமளித்தல், காத்தருளல், பத்ம முத்திரை முதலியவைகளை (குறிப்பிட்டும்) (இருக்கும்), लक्ष्मीनृसिंह-லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! मम- எனக்கு, देहि- கொடுத்தருள வேண்டும், करावलम्बम् - கைப்பிடியை.

(பொ-ரை) ஒரு (கையினால்) சக்ராயுதத்தையும் மற்றொரு கையினால் சங்கையும் மற்றும் இன்னொரு

Koviloor Digital Library

கையால் லக்ஷ்மியை அணைத்துக் கொண்டும் வலது கையால் வரமளித்தல், காத்தருளல், பத்மமுத்திரை முதலியவைகளை குறிப்பிட்டுக் கொண்டு நிற்கும் லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

Oh ! (Lord) Lakṣmīnṛsiṁha ! One who stands holding the disc in one (hand) and the conch in the other hand and embracing (Lakṣmī), the daughter of the ocean with yet another and (indicating) the propitiousness, protection and the lotus symbol with the right (hand) ! Extend (thy) supporting hand to me.

अन्धस्य मे हृतविवेकमहाधनस्य
चोरैः प्रभो बलिभिरिन्द्रियनामधेयैः ।
मोहान्धकूपकुहरे विनिपातितस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ।। १५ ।।

அந்தஸ்ய மே ஹ்ருதவிவேகமஹாதநஸ்ய
சோரைః ப்ரபோ பலிபிரிந்த்ரிய-நாமதேயை:
மோஹாந்தகூபகுஹரே விநிபாதிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 15

(ப-ரை) : अन्धस्य - குருடான, मे - என்னுடைய, हृत-विवेक-महाधनस्य - விவேகம் என்னும் பெருஞ் செல்வத்தை கவரப்பட்ட, चोरैः - திருடர்களால், प्रभो-தேவனே! बलिभिः வலிமையுடைய, इन्द्रियनामधेयैः - புலன்கள் என்னும் பெயருடையனவால், मोहान्ध-कूप-कुहरे - மோஹம் என்னும்

Koviloor Digital Library

இருண்ட கிணற்றுக்குழியில், विनिपातितस्य-தள்ளப்பட்ட, लक्ष्मीनृसिंह-லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப்பெருமானே, मम - எனக்கு, देहि - கொடுத்தருளவேண்டும், करावलम्बम्- கைப்பிடியை.

(பொ-ரை): தேவனே! லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! புலன்கள் என்றும் பெயருடைய வலிமையுடைய திருடர்களால் குருடான என்னுடைய பகுத்தறிவு என்னும் பெருஞ்செல்வம் கவரப்பட்டு மோஹம் என்னும் இருண்ட பாழும் கிணற்றில் தள்ளப்பட்ட எனக்குக் கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—அறிவின்மை என்னும் திரையை நீக்கிக் காத்தருள வேண்டும் என்பது கருத்து.

Oh! Lord Lakṣmīnṛsiṁha! Extend (thy) supporting hand to me who am blind and who have been thrown into the dark well of infatuation by the powerful thieves called the sense-organs and whose great wealth of discrimination has been taken away.

प्रह्लादनारदपराशरपुण्डरीक-
व्यासादिभागवतपुङ्गवहृन्निवास ।
भक्तानुरक्तपरिपालनपारिजात
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ १६ ॥

Koviloor Digital Library

ப்ரஹ்லாத-நாரத-பராஶர-புண்டரீக-
வ்யாஸாதிபாகவத - புங்கவ-ஹ்ருந்நிவாஸ
பக்தாநுரக்த - பரிபாலந - பாரிஜாத
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் 16

(ப-ரை) : प्रह्लाद-नारद-पराशर-पुण्डरीक-व्यासादि-भागवत-पुङ्गव-हृन्निवास - பிரஹ்லாதன், நாரதர், பராசரர், புண்டரீகன், வியாஸர் முதலான சிறந்த பக்தர்களின் இதயத்தில் குடியிருப்பவனே! भक्तानुरक्त-परिपालन-पारिजात - பாரிஜாதம் (மரம்) போன்று பக்தர்களை பரிவுடன் காப்பவனே! लक्ष्मीनृसिंह - லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! मम - எனக்கு, देहि - கொடுத்தருள வேண்டும், करावलम्बम् - கைப்பிடியை.

(பொ-ரை) : பிரஹ்லாதன், நாரதர், பராசரர், புண்டரீகன், வியாஸர் முதலான சிறந்த பக்தர்களின் இதயத்தில் குடியிருப்பவனே! பாரிஜாதம் (மரம்) போன்று பக்தர்களை பரிவுடன் காத்தருள்பவனே! லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானே! எனக்கு கை கொடுத்தருள வேண்டும்.

குறிப்பு:—பிரஹ்லாதன் சிறந்த பக்தன் என்பது நாம் அறிந்ததே. அது போலவே முதலில் பணிவற்ற புண்டரீகனும் சிறந்த பக்தனாக மாறி அவன் பெயரால் 'பண்டரீபுரம்' என்னும் தலம் சிறந்து விளங்குவதும் நூல்களில் கூறப்படுகின்றது. பக்தர்களை பரிவுடன் காப்பதில் வல்லவன் என்பதற்கு உதாரணமாக சில பெயர்களைக் குறிப்பிட்டு இங்கே அறிவுறுத்தப்படுகின்றது. இப்போது காணப்படும் பவழமல்லி என்னும் புஷ்பம்தான், பாரிஜாதம் என்று சொல்லுகிறார்கள்.

Koviloor Digital Library

Oh ! (Lord) Lakṣmīnṛsiṁha ! The resident in the hearts of the excellent devotees such as Prahlāda, Nārada, Parāśara, Puṇḍarīka, Vyāsa and others ! One who similar to the Pārijāta (tree) compassionately protects the devotees ! Extend (thy) supporting hand to me.

लक्ष्मीनृसिंहचरणाब्जमधुव्रतेन
स्तोत्रं कृतं शुभकरं भुवि शङ्करेण ।
ये तत्पठन्ति मनुजा हरिभक्तियुक्ता-
स्ते यान्ति तत्पदसरोजमखण्डरूपम् ।। १७ ।।

லக்ஷ்மீந்ருஸிம்ஹ - சரணாப்ஜ-மதுவ்ரதேந
ஸ்தோத்ரம் க்ருதம் ஶுபகரம் புவி ஶங்கரேண
யே தத்படந்தி மநுஜா ஹரிபக்தியுக்தாஸ்-
தே யாந்தி தத்பத-ஸரோஜமகண்டரூபம் 17

(ப-ரை) लक्ष्मीनृसिंह-चरणाब्ज-मधुव्रतेन - லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானின் பாதத்தாமரைகளில் தேனீ போன்று, स्तोत्रं - துதியானது, कृतं - செய்யப் பட்டது, शुभकरं - நன்மை பயப்பது, भुवि - இப்புவியில், शङ्करेण - சங்கரரால், ये - எவர்கள், पठन्ति - படிக்கின்றனர் களோ, मनुजाः - மனிதர்கள், हरिभक्तियुक्ताः - திருமாலிடம் பக்தி உடையவர்களாக, ते - அவர்கள், यान्ति - அடை கின்றனர்கள், तत्पद-सरोजम्-मखण्डरूपम् - இன்பமயமான அந்தத் திருவடித் தாமரையை.

Koviloor Digital Library

(பொ-ரை) : லக்ஷ்மியுடன் கூடிய ந்ருஸிம்ஹப் பெருமானின் திருவடித்தாமரைகளில (அமர்ந்த) தேனீ போன்ற சங்கரரால் இப்புவியில் நன்மை பயக்கும் இத்துதியானது செய்யப்பட்டது. எவர்கள் திரு மாலிடம் பக்தி உடையவர்களாக இத்துதியைப் படிக் கின்றார்களோ அவர்கள் இன்பமயமான அந்தத் திரு வடித்தாமரையை அடைகின்றார்கள்.

This hymn which yields good in (this) world has been composed by the bee Śaṅkara resting on the lotus feet of (Lord) Lakṣmīnṛsiṁha. Those who read this (hymn) with devotion to Viṣṇu would reach that blissful Lotus Feet (of Lord Lakṣmīnṛsiṁha).

Koviloor Digital Library

श्रीशङ्करभगवत्पादविरचितम्

॥ लक्ष्मीनृसिंहपञ्चरत्नम् ॥

ஸ்ரீ சங்கரபகவத்பாதர் இயற்றிய

லக்ஷ்மீந்ருஸிம்ஹ பஞ்சரத்னம்

त्वत्प्रभुजीवप्रियमिच्छसि चेन्नरहरिपूजां कुरु सततं
प्रतिबिम्बालङ्कृतिधृतिकुशलो बिम्बालङ्कृतिमातनुते।
चेतोभृङ्ग भ्रमसि वृथा भवमरुभूमौ विरसायां
भज भज लक्ष्मीनरसिंहानघपदसरसिजमकरन्दम् ॥

த்வத்-ப்ரபு-ஜீவ-ப்ரியமிச்சஸி
சேந்நரஹரிபூஜாம் குரு ஸததம்
ப்ரதிபிம்பாலங்க்ருதி-த்ருதிகுஶலோ
பிம்பாலங்க்ருதிமாதநுதே
சேதோப்ருங்க ப்ரமஸி வ்ருதா
பவமருபூமௌ விரஸாயாம்
பஜ பஜ லக்ஷ்மீநரஸிம்ஹா-
நகபதஸரஸிஜமகரந்தம் 1

(பொ-ரை) : உன்னுடைய பிரபுவின் அன்பைப் பெறவிரும்புகின்றாய் என்றால் நரஸிம்மரை எப்போதும் வழிபடுவாயாக. (கண்ணாடியில்) அலங்கரிக்கப்பட்ட வடிவினைக் காண விரும்புபவன் (முதலில்) உருவத்தை அலங்கரிக்கிறான். மனமாகிற வண்டே! பயனற்ற ஸம்ஸாரமென்னும் பாலைவனத்தில் வீணாக அலை கின்றாய். லக்ஷ்மீ நரஸிம்ஹப் பெருமானின் மாசற்ற தாமரைத் திருவடியினின்று தேனை நுகர்வாயாக.

Koviloor Digital Library

शुक्तौ रजतप्रतिभा जाता कटकाद्यर्थसमर्था चेद्-
दुःखमयी ते संसृतिरेषा निर्वृतिदाने निपुणा स्यात् ।
चेतोभृङ्ग भ्रमसि वृथा भवमरुभूमौ विरसायां
भज भज लक्ष्मीनरसिंहानघपदसरसिजमकरन्दम् ॥

ஶுக்தௌ ரஜதப்ரதிபா ஜாதா
கடகாத்யர்த்த-ஸமர்த்தா சேத்
து:கமயீ தே ஸம்ஸ்ருதிரேஷா
நிர்வ்ருதிதானே நிபுணா ஸ்யாத் ।
சேதோப்ருங்க ப்ரமஸி வ்ருதா
பவமருபூமௌ விரஸாயாம்
பஜ பஜ லக்ஷ்மீநரஸிம்ஹா-
நகபதஸரஸிஜமகரந்தம் 2

(பொ-ரை) : சிப்பியில் தோற்றமளிக்கும் வெள்ளியை கங்கணம் முதலான பொருட்களாகச் செய்ய முடியுமென்றால், துயரளிக்கும் உன்னுடைய இந்த வாழ்க்கையானதும் முடிவில்லாத ஆனந்தத்தையளிக்க திறமை உடையதாகும். மனமாகிற வண்டே........ தேனை நுகர்வாயாக.

आकृतिसाम्याच्छाल्मलिकुसुमे स्थलनलिनत्वभ्रममकरोः
गन्धरसाविहकिमुविद्येते विफलं भ्राम्यसि भृशविरसेऽस्मिन्
चेतोभृङ्ग भ्रमसि वृथा भवमरुभूमौ विरसायां
भज भज लक्ष्मीनरसिंहानघपदसरसिजमकरन्दम् ॥ ३ ॥

Koviloor Digital Library

ஆக்ருதி-ஸாம்யாச்-சால்மலிகுஸுமே
ஸ்தலநளினத்வ-ப்ரமமகரோ:
கந்தரஸாவிஹ கிமு வித்யேதே
விபலம் ப்ராம்யஸி ப்ருஶவிரஸே(அ)ஸ்மின்
சேதோப்ருங்க ப்ரமஸி வ்ருதா
பவமருபூமௌ விரஸாயாம்
பஜ பஜ லக்ஷ்மீநரஸிம்ஹா-
நகபதஸரஸிஜமகரந்தம் 3.

(பொ-ரை) : (இரண்டிற்கும் உள்ள) உருவ ஒற்றுமையினால் இலவம்பஞ்சு மலரில் நிலத்தாமரை என்று தவறாகக் கண்டாய். (இலவம் பஞ்சு மலரில்) நறுமணமும், இனிப்பும் உள்ளனவா என்ன ? இனிப்பற்ற அதனை நீ வீணாகச்சுற்றி வருகின்றாய். மனமாகிற வண்டே...........தேனை நுகர்வாயாக.

स्रक्चन्दनवनितादीन्विषयान्सुखदान्मत्वा तत्र विहरसे
गन्धफलीसदृशा ननु तेऽमी भोगानन्तरदुःखकृतःस्युः ।
चेतोभृङ्ग भ्रमसि वृथा भवमरुभूमौ विरसायां
भज भज लक्ष्मीनरसिंहानघपदसरसिजमकरन्दम् ॥

ஸரக்-சந்தன-வனிதாதீந் விஷயாந்
ஸுகதாந் மத்வா தத்ர விஹரஸே
கந்தபலீஸத்ருஶா நநு தே(அ)மீ
போகாநந்தரதுஃகக்ருத: ஸ்யு:
சேதோப்ருங்க ப்ரமஸி வ்ருதா
பவமருபூமௌ விரஸாயாம்
பஜ பஜ லக்ஷ்மீநரஸிம்ஹா-
நகபதஸரஸிஜமகரந்தம் 4

Koviloor Digital Library

(பொ-ரை) : மலர்மாலே, சந்தனம், பெண்கள் முதலானவற்றை இன்பமளிப்பவை என்று நினைத்து அவைகளில் மனம் மகிழ்கின்றாய். அவைகள் தாழம் பூவைப் போன்று நுகர்ந்தபின் துயரமளிப்பவை. மனமாகிற வண்டே......தேனே நுகர்வாயாக.

तव हितमेकं वचनं वक्ष्ये शृणु सुखकामो यदि सततं
स्वप्ने दृष्टं सकलं हि मृषा जाग्रति च स्मर तद्वदिति ।
चेतोभृङ्ग भ्रमसि वृथा भवमरुभूमौ विरसायां
भज भज लक्ष्मीनरसिंहानघपदसरसिजमकरन्दम् ॥

தவ ஹிதமேகம் வசனம் வக்ஷ்யே
ஶ்ருணு ஸுககாமோ யதி ஸததம்
ஸ்வப்நே த்ருஷ்டம் ஸகலம் ஹி
ம்ருஷா ஜாக்ரதி ச ஸ்மர தத்வதிதி
சேதோப்ருங்க ப்ரமஸி வ்ருதா
பவமருபூமௌ விரஸாயாம்
பஜ பஜ லக்ஷ்மீநரஸிம்ஹா-
நகபதஸரஸிஜமகரந்தம் 5

(பொ-ரை): நன்மை பயக்கும் ஒரு சொல்லே உனக்குக் கூறுகின்றேன். எப்போதும் இன்பத்தைப் பெறவிருப்பமுடையவன் என்றால் (நீ) கேட்பாயாக. கனவில் பார்க்கப்பட்ட அனைத்துமே பொய்யானது; விழித்த நிலையிலும் அது அவ்வாறே என்று நினைவில் கொள்வாயாக. மனமாகிற வண்டே......தேனே நுகர்வாயாக.

